TENAGA NASIONAL
Better. Brighter.

| Headline | TNB: Notice on locked premises not fake | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 26 Aug 2016 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 2 |
| ArticleSize | 182 cm² | Journalist | NULL |
| PR Value | RM 1,588 | | |
| | | | |



# பூட்டப்பட்ட மனையிடங்கள் மீதான அறிவிப்பு போலியல்ல - *டிஎன்பி*

பெட்டாலிங்ஜெயா, ஆக. 26-

தெனாகா நேஷனல் பெர்ஹாட்டிடமிருந்து வந்த பூட்டிய வீடுகள் குறித்த சமூக ஊடகத் தகவல் பதிவு அந்தப் பயனீட்டு நிறுவனத்திடமிருந்து வந்த ஓர் அசல் அறிவிப்பு; அது போலியானதல்ல என டிஎன்பி தெளிவுபடுத்தியுள்ளது.

வழக்கமான ஒரு நடைமுறையின் ஒரு பகுதியாக கோலாலம்பூர் டிஎன்பி அளவிடல் பிரிவு அந்த சமூக ஊடகப் பதிவைச் செய்துள்ளது.

பூட்டிய நுழைவாயில் அல்லது இதர தடுப்புகளால் சம்பந்தப்பட்ட பயனீட்டாளர்களின் மனையிடங்களுக்கு டிஎன்பி பணியாளர்கள் செல்ல இயலாத நிலையில் மேற்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது என கமாலியா அப்துல் காதிர் கூறினார். அவர் டிஎன்பியின் விநியோகப் பிரிவின் (வாடிக்கையாளர் சேவை) முதுநிலை பொது மேலாளர் ஆவார்.

அந்த அறிவிப்பு குறித்த சமூக ஊடகப் பதிவு பழைய டிஎன்பி அலுவலக முகவரியைப் பயன்படுத்தி வேகமாகப் பரவியது. குழப்பத்தைத் தவிர்க்கும் வகையில் அந்த அறிவிப்பு செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த இணையப் பதிவை பகிர வேண்டாம். பயனீட்டாளர்கள் ஐயத்திற்குரிய அறிவிப்பு எதையும் காண நேர்ந்தால் டிஎன்பி வாடிக்கையாளர் சேவைப் பிரிவை 1-300-88-5454இல் அல்லது அருகிலுள்ள டிஎன்பி அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



Powered by: iSENTIA